# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1723/4 - 2011 සැප්තැම්බර් 12 වැනි සඳුදා - 2011.09.12

*1723/4 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.-பீ. 3/87* (ii).

**1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம்**

*1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் 53 ஆம் பிரிவின் கீழ் இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட விதிகள்.*

தவிசாளர்,
இலங்கைப் பிணையங்கள்,
பரிவர்த்தனை ஆணைக்குழு.

கொழும்பு,
2011, செத்தெம்பர் 12.

**விதிகள்**

1. (1) இவ்விதிகள் 2011 ஆம் ஆண்டின் கூறு நம்பிக்கைப்பொறுப்புக் கோவை என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இக்கோவையின் ஏற்பாடுகள், பரிவர்த்தனை வியாபாரஞ் செய்யப்பட்ட நிதியங்களுட்பட எல்லாக்கூறு நம்பிக்கைப் பொறுப்புகளுக்கும், அத்தகைய நம்பிக்கைப் பொறுப்புகளுக்கு அத்தகைய ஏற்பாடுகள் ஏற்புடையனவாகின்ற அளவுக்கு, ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது, அதற்கெனச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது அல்லது ஆணைக்குழு காலத்துக்குக்காலம் வழங்கக்கூடிய பணிப்புரைகள் என்றவகையாக, இவ்விதிகளுள் ஏதேனுமொன்றின் அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் ஏற்புடைமையிலிருந்து ஆட்களுக்கு விலக்களிக்கலாம்.

2. (1) ஒரு கூறு நம்பிக்கைப்பொறுப்பானது, சட்டத்தின் ஏற்பாடுகள், இக்கோவையின் ஏற்பாடுகள், நம்பிக்கைப்பொறுப்பு உறுதி, அத்துடன் அத்தகைய முகாமைக் கம்பனியின் இறுதியாக வெளியிடப்பட்ட விளக்க விவரக்குறிப்பு மற்றும் காலத்துக்குக்காலம் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் பணிப்புரைகள் ஆகியனவற்றிற்கிணங்க முகாமைக் கம்பனியொன்றினால் முகாமை செய்யப்படுதல் வேண்டும்.

(2) இவ்விதியின் (1) ஆம் பந்திக்கமைய, முகாமைக் கம்பனி, கூறு நம்பிக்கைப்பொறுப்பின் குறிக்கோள்களை எய்தப்பெறுவதற்கென வைப்பிலிடப்பட்ட ஆதனத்தின் முதலீடு தொடர்பான முடிபுகளைச் செய்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது, முகாமைக் கம்பனியை அதன் தொழிற்பாட்டுக் காலப்பகுதியின்போது ஆகக்குறைந்த தேறிய மூலதனத்தைப் பேணுமாறு தேவைப்படுத்தலாமென்பதுடன், அதற்கு இணங்கியொழுகுவது அத்தகைய முகாமைக் கம்பனியின் கடமையாதலும் வேண்டும்.

(4) முகாமைக் கம்பனி, அத்தகைய கூறு நம்பிக்கைப்பொறுப்புகளின் கூறுகள் நிரற்படுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்படும் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையிலிருந்து (பரிவர்த்தனைகளிலிருந்து) "நெறியளவிலான" முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்.

3. (1) முகாமைக் கம்பனியொன்று, பிணையங்களை வாங்குவதிலும் விற்பதிலும் அதன் கூறு வைத்திருப்போர் மற்றும் கூறு நம்பிக்கைப்பொறுப்பு சார்பில் மட்டுமே செயலாற்றுதல் வேண்டுமென்பதுடன், அது ஏதேனும் ஒப்புரவு அக்கறையைக் கொண்டுள்ள ஏதேனும் குழுமத்தின் அல்லது கம்பனியின் பிணையங்களை ஆணைக்குழுவின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி வாங்குதலோ விற்றலோ ஆகாது.

(2) ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டாலன்றி, முகாமைக் கம்பனியொன்று அதன் சொந்தப் பெயரில் எவையேனும் பிணையங்களை வாங்குவதினின்றும் அல்லது விற்பதினின்றும் அல்லது முழுமையாக அல்லது பகுதியளவில், வெளிப்படையாக அல்லது மறைமுகமாகப் பிணையங்களைக் கையாளும் தொழிலில் ஈடுபடும் ஏதேனும் குழுமத்தில் அல்லது கம்பனியில் ஏதேனும் ஒப்புரவு அக்கறையைக் கொண்டிருப்பதினின்றும் தடை செய்யப்படல் வேண்டும்.

4. முகாமைக் கம்பனியொன்று எல்லா நேரங்களிலும் கூறு நம்பிக்கைப்பொறுப்பின் முகாமை தொடர்பிலான தொழிற்பாடுகளில் நியாயமான கவனத்தைப் பிரயோகிக்க வேண்டுமென்பதுடன், ஊழியர்களினதும் பணிப்பாளர்களினதும் ஏதேனும் மோசடி, பாரிய அசட்டை அல்லது தகாத செயல் காரணமாகக் கூறு நம்பிக்கைப்பொறுப்பினால் அல்லது கூறு வைத்திருப்போரால் உறப்படும் ஏதேனும் நட்டத்திற்குப் பொறுப்புடையதாதலும் வேண்டும்.

5. நம்பிக்கைப்பொறுப்பு உறுதியில் முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும் அத்துடன் 6 ஆம் விதியின் ஏற்பாடுகளுக்கமையவும், முகாமைக் கம்பனியொன்றின் சேவைகள், நம்பிக்கைப்பொறுப்பாளரினால், பின்வரும் நிகழ்வுகளுள் எதுவும் அல்லது அவற்றிற்கு மேற்பட்டவை இடம்பெறுவதன் மேல், ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் எழுத்தில் முடிவுறுத்தப்படலாம் :-

(அ) நல்ல, போதிய காரணத்திற்காகக் கூறு வைத்திருப்போர்களின் நலன்கருதி முகாமைக் கம்பனியில் மாற்றம் செய்வது விரும்பத்தக்கதென நம்பிக்கைப்பொறுப்பாளரினால் நியமிக்கப்பட்டவரும் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவருமான ஆளொருவரினால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் நம்பிக்கைப்பொறுப்பாளர் அபிப்பிராயப்படின், அல்லது

(ஆ) (முகாமைக் கம்பனியினால் வைத்திருக்கப்படுபவை நீங்கலாக) வழங்கலிலுள்ள மொத்தக் கூறுகளின் ஆகக்குறைந்தது எழுபத்தைந்து சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கூறு வைத்திருப்போர்கள், முகாமைக் கம்பனி பதவி நீக்கப்படல் வேண்டும் என்னும் எழுத்திலான வேண்டுகோள் ஒன்றை, விடயத்திற்கேற்றாற்போல், நம்பிக்கைப் பொறுப்பாளரிடம் அல்லது ஆணைக்குழுவிடம் ஒப்படைப்பின்.

6. (1) கூறு நம்பிக்கைப்பொறுப்பு ஒன்றைத் தொழிற்படுத்துவதற்கு உரிமமளிக்கப்பட்டிருக்கின்ற புதிய முகாமைக் கம்பனியொன்று நம்பிக்கைப்பொறுப்பாளரினால் நியமிக்கப்பட்டிருந்து முடிவுறுத்தலும் புதிய முகாமைக் கம்பனியின் நியமனமும் பற்றிய எழுத்திலான அறிவித்தல் கூறு வைத்திருப்பவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்ற வரையில் முகாமைக் கம்பனி ஒன்றின் சேவைகள் முடிவுறுத்தப்படலாகாது. புதிய முகாமைக் கம்பனி பதவி ஏற்கும் அதே நேரத்தில் முடிவுறுத்தலானது பயனுறுவதாதல் வேண்டும்.

(2) புதிய முகாமைக் கம்பனி ஒன்று, அது நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து, அதன் தற்றுணிபின்படி, ஆணைக்குழுவினதும் நம்பிக்கைப்பொறுப்பாளரினதும் சம்மதத்துடன், கூறு நம்பிக்கைப்பொறுப்பின் பெயரை மாற்றலாம்.

7. (1) வைப்பிலிடப்பட்ட ஆதனம் கூறு நம்பிக்கைப்பொறுப்பின் சார்பில் நம்பிக்கைப்பொறுப்பாளரினால் வைத்திருக்கப்படல் வேண்டும்.

(2) சட்டத்தின் ஏற்பாடுகள், இவ்விதிகள், நம்பிக்கைப்பொறுப்பு உறுதி, முகாமைக் கம்பனியின் இறுதியாக வெளியிடப்பட்ட விளக்க விவரக்குறிப்பு, காலத்துக்குக்காலம் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் பணிப்புரைகள் ஆகியவற்றுக்கிணங்க, கூறு நம்பிக்கைப்பொறுப்பானது முகாமைக் கம்பனியினால் முகாமை செய்யப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு நம்பிக்கைப்பொறுப்பாளர் நியாயமான கவனம் எடுத்தல் வேண்டும்.

(3) நம்பிக்கைப்பொறுப்பாளர், நம்பிக்கைப்பொறுப்பு உறுதியின் ஏற்பாடுகள் மற்றும் ஆணைக்குழுவினால் காலத்துக்குக்காலம் வழங்கப்படும் பணிப்புரைகள் என்பவற்றுக்கிணங்க, வைப்பிலிடப்பட்ட ஆனத்தின் முதலீடுகள் பற்றி முகாமைக் கம்பனியினால் காலத்துக்குக்காலம் விடுக்கப்படும் அறிவுறுத்துறைகளை நிறைவேற்றல் வேண்டும்.

8. (1) நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவர் கூறு நம்பிக்கைப்பொறுப்பிலிருந்து ஓய்வு பெறலாம். ஆயின், அத்தகைய ஓய்வுபெறலானது நம்பிக்கைப்பொறுப்பு உறுதியுடன் இணங்கியொழுகுதலும் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவரான புதிய நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவர் அத்தகைய ஓய்வுபெறலின் மீது அதே நேரத்தில் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, சட்டத்தின் 31ஆ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட சூழ்நிலை எதுவுமிருக்கின்றதெனத் திருப்தியுறுமிடத்து, நம்பிக்கைப்பொறுப்பாளரை ஓய்வுபெறுமாறு பணிக்கலாம்; ஆயின், ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவரான புதிய நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவர் அத்தகைய ஓய்வுபெறலின்மீது அதே நேரத்தில் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

(3) புதிய நம்பிக்கைப்பொறுப்பாளர் பதவி ஏற்கும் அதே நேரத்தில் நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவரின் ஓய்வுபெறல் பயனுறுவதாதல் வேண்டும்.

9. (1) ஒரு முகாமைக் கம்பனியானது, இக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், நம்பிக்கைப்பொறுப்பு உறுதிக்கும், ஆணைக்குழுவினால் காலத்துக்குக்காலம் வழங்கப்படும் பணிப்புரைகளுக்கும் இணங்க வைப்பிலிடப்பட்ட ஆதனத்தை முதலீடு செய்யலாம்.

(2) ஆணைக்குழுவினால் வேறுவகையாக அனுமதிக்கப்பட்டாலன்றி, வைப்பிலிடப்பட்ட ஆதனத்தின் ஆகக்குறைந்தது மூன்று சதவீதத்தொகையிலான திரவமட்டம், இலகுவாக மீட்டெடுப்பதை உறுதிப்படுத்துவதற்காகக் காசாகவோ அல்லது கூடியவரை காசை ஒத்ததாகவோ பேணப்படுதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், ஆணைக்குழுவானது அதன் தற்றுணிபின்படி மேலேயுள்ள எல்லையை அதிகரிக்கலாம் அல்லது குறைக்கலாம்.

(3) முகாமைக் கம்பனியினால் செய்யப்பட்ட மொத்த முதலீடு, இக்கோவையின் ஏற்பாடுகளினால் அல்லது நம்பிக்கைப்பொறுப்பு உறுதியினால் அல்லது ஆணைக்குழுவினால் வழங்கப்படும் பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்ட ஏதேனும் எல்லையை விஞ்சும்பொழுதெல்லாம், முகாமைக் கம்பனி, உடனடியாக, அத்தகைய விஞ்சுதொகை பற்றியும் அதற்கான காரணங்களையும் ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன், குறித்துரைக்கப்பட்டவாறான எல்லைகளுக்கு அத்தகைய முதலீட்டைக் குறைப்பதற்கு எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகளை மேலும் அறிவித்தலும் வேண்டும். எவ்வாறாயினும், சந்தை ஏற்றத்தாழ்வுகள் காரணமாக எல்லைகளின் ஏதேனும் மீறுகையை இது தவிர்க்கின்றது.

10. (1) ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டாலொழிய, முகாமைக் கம்பனி ஒன்றானது பின்வரும் முதலீடுகளைச் செய்தலாகாது.

(அ) பண்டங்கள், எதிர்வுகள் மற்றும் விருப்புத் தெரிவுகள் என்பவற்றிலான முதலீடுகள்;

(ஆ) காணி முதலீட்டுக் கம்பனிகளிலான அல்லது காணி முதலீட்டுச் செயற்பாடுகளைக் கொண்டுள்ள கம்பனிகளிலான முதலீடு தவிர, காணியிலான முதலீடுகள் ;

(இ) கூறு நம்பிக்கைப்பொறுப்பு எந்தக் கம்பனியில் பங்கு மூலதனத்தைக் கொள்வனவு செய்துள்ளதோ அந்தக் கம்பனியின் முகாமைக் கட்டுப்பாட்டைப்பெறும் நோக்கத்திற்கான முதலீடுகள் ;

(ஈ) நிரற்படுத்தப்படாத பிணையங்களிலான அல்லது வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடு ;

(உ) வரையறுக்கப்படாத பொறுப்பை ஏற்பதனை உட்படுத்துகின்ற ஏதேனும் சொத்திலான முதலீடு ;

(ஊ) நிர்ணயிக்கப்பட்டதும் தீர்மானிக்கத்தக்கதுமான எதிர்கால முதிர்வடையும் திகதியைக் கொண்ட பிணையங்கள் தொடர்பாகக் தவிர, பிணையங்களுக்கு எதிராகக் கடன் வாங்குவதன் மூலம் அல்லது எல்லைக்கடன் மீது வாங்குவதன் மூலம் ஆற்றல் ஆதாயம் பெறுதல் ; அத்தகைய ஆற்றல் ஆதாயம் பெறுதலின் சதவீதம், ஆணைக்குழுவின் அங்காரத்துடன் தீர்மானிக்கப்பட்டு நம்பிக்கைப் பொறுப்பு உறுதியில் கூறப்படும்; ஆயின் ஒரு கூறு நம்பிக்கைப்பொறுப்பு நிலுவையாக வைத்திருக்கக்கூடிய ஆகக்கூடிய பயன்தருகை, வைப்பிலிடப்பட்ட ஆனத்தின் பதினைந்து சதவீதத்தை அல்லது ஆணைக்குழு காலத்துக்குக்காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு சதவீதத்தை விஞ்சுதலாகாது ; அத்துடன்

(எ) முகாமைக் கம்பனி ஒன்றினால் பொறுப்பேற்கப்பட வேண்டியனவல்லாத முதலீடுகளாகவிருக்கின்றவையும், ஆணைக்குழுவினால் காலத்துக்குக்காலம் பெயர் குறிப்பிடப்படக்கூடியவாறானவையுமான அத்தகைய வேறு முதலீடுகள்.

(2) பண்டங்களிலான முதலீடுகள் தொடர்பாக விதி 10 (1) (அ) இல் விதிக்கப்பட்ட தடை, தங்கத்தின் அல்லது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் பண்டத்தின் விலையைத் தொடர்ந்தறிகின்ற பரிவர்த்தனை வியாபாரஞ் செய்யப்பட்ட நிதியங்களுக்கு ஏற்புடையதாதலாகாது.

(3) காணி முதலீட்டுக் கம்பனிகளிலான முதலீடுகளை விசேட தொழிலாகக் கொண்டிருப்பது கூறு நம்பிக்கைப்பொறுப்பின் குறிக்கோள் ஒன்றாக இருக்கின்றவிடத்து, அந்நிகழ்வு விளக்க விவரக்குறிப்பில் வெளிக்காட்டப்படுதல் வேண்டும்.

11. (1) விதி 12 (1) இன் ஏற்பாடுகளுக்கமைய, ஆற்றப்பட்ட சேவைகளுக்கான ஊதியம் என்ற வகையில் வைப்பிலிடப்பட்ட ஆதனத்திலிருந்து நம்பிக்கைப் பொறுப்பாளரால் முகாமைக் கம்பனிக்குச் செலுத்தப்படவேண்டிய ஒரே ஒரு கொடுப்பனவானது, நம்பிக்கைப்பொறுப்பு உறுதியிலுள்ள ஏற்பாடுகளின் நியதிகளின்படியான காலாகாலக் கட்டணமாக, அரசாங்கத்தினால் காலத்துக்காலம் விதிக்கப்படும் எவையேனும் வரிகளும் அறவீடுகளும் அல்லது தீர்வைகளும் உட்பட இருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய கட்டணங்களின் தொகையானது, இறுதியாக வெளியிடப்பட்ட விளக்க விவரக்குறிப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு நம்பிக்கைப்பொறுப்பு உறுதியின் ஏற்பாடுகளுக்கு அமைய, முகாமைக் கம்பனியின் காலாகாலக் கட்டணமாக முகாமைக் கம்பனியினால் கணிக்கப்படல் வேண்டும்.

(3) நம்பிக்கைப்பொறுப்பு உறுதியில் குறித்துரைக்கப்பட்ட ஆகக்கூடிய அனுமதிக்கப்பட்ட மட்டம்வரை, முகாமைக் கம்பனியின் வருடாந்த விதிப்பனவுகளிலான ஏதேனும் அதிகரிப்புப் பற்றி முகாமைக் கம்பனியானது கூறுவைத்திருப்போர்களுக்கு ஒரு மாதத்துக்குக் குறையாத எழுத்திலான முன்னறிவித்தலை அல்லது பத்திரிகை அறிவித்தலைக் கொடுத்தல் வேண்டும்.

12. (1) விதி II இன் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், வைப்பிலிடப்பட்ட ஆனத்திலிருந்து பின்வரும் ஏனைய செலவுகள் நம்பிக்கைப்பொறுப்பாளரால் செலுத்தப்படலாம்; ஆயின், அத்தகைய செலவுகள் பற்றிய போதிய வெளிக்காட்டுகை, கூறு வைத்திருப்போர்களுக்கு வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் :-

(அ) வைப்பிலிடப்பட்ட ஆதனத்திலான கையாளுகைச் செலவு ;

(ஆ) வைப்பிலிடப்பட்ட ஆதனம் தொடர்பில் அல்லது கூறுகளை வழங்குவது தொடர்பில் செலுத்தப்படற்பாலதான வரிவிதிப்பும் தீர்வைகளும் ;

(இ) நம்பிக்கைப்பொறுப்பு உறுதியின் தயாரிப்பில் அல்லது திரிபுபடுத்தலில் உறப்படும் எவையேனும் செலவு தொகைகள் ;

(ஈ) கூறு வைத்திருப்பவர்களின் கூட்டங்கள் தொடர்பில் கூறப்பட்ட எவையேனும் செலவுத் தொகைகள் ;

(உ) நம்பிக்கைப்பொறுப்பாளரின் கட்டணங்கள் ;

(ஊ) வைப்பிலிடப்பட்ட ஆதனத்திலிருந்து செலுத்தப்படவேண்டுமென நம்பிக்கைப்பொறுப்பு உறுதியினால் அதிகாரமளிக்கப்படுகின்ற நம்பிக்கைப்பொறுப்பாளரின் எவையேனும் செலவுகள் அல்லது செலவழிப்புகள் ;

(எ) கணக்காய்வாளரின்கணக்காய்வுக் கட்டணங்களும் கணக்காய்வாளரின் ஏனைய செலவுகளும் ;

(ஏ) ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட உரிமமளித்தற் கட்டணங்கள் ;

(ஐ) வைப்பிலிடப்பட்ட ஆனத்திற்குப் பொறுப்பிக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றவையும், அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படுகின்றவையுமான நேரடியான மற்றும் மறைமுகமான வரிகள் யாவும் ;

(ஒ) வைப்பிலிடப்பட்ட ஆதனத்தைப் பாதுகாப்பதில் உறப்படும் சட்டச் செலவுகள் ;

(ஓ) தங்கத்தின் விலையை அல்லது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் பண்டத்தின் விலையைத் தொடர்ந்தறிகின்ற பரிவர்த்தனை வியாபாரஞ்செய்யப்பட்ட நிதியமொன்றின் விடயத்தில், தங்கத்தை அல்லது அத்தகைய வேறு பண்டத்தைக் களஞ்சியப்படுத்திக் கையாள்வதற்கு உறப்பட்ட மீண்டுவருஞ்செலவுகள் ;

(ஔ) ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்பட்ட நிதிகளின் விடயத்தில் நிரற்படுத்தற் கட்டணங்கள் ; அத்துடன்

(க) ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதும் நம்பிக்கைப்பொறுப்பு உறுதியில் குறித்துரைக்கப்பட்டதுமான வேறேதேனும் கட்டணம் ;

(2) முகவர்களுக்குச் செலுத்தப்படும் தரகுகள் வைப்பிலிடப்பட்ட ஆதனத்திலிருந்து செலுத்தப்படுதலாகாது.

13. கூறு நம்பிக்கைப்பொறுப்பு, வேறு ஏதேனும் கூறு நம்பிக்கைப்பொறுப்பின் கூறுகளில் முதலீடு செய்யுமிடத்து, கூறு நம்பிக்கைப்பொறுப்பு எந்தக் கூறு நம்பிக்கைப்பொறுப்பில் முதலீடு செய்கிறதோ அந்தக் கூறு நம்பிக்கைப்பொறுப்பு, அதே முகாமைக் கம்பனியால் அல்லது முகாமைக் கம்பனியின் தொடர்புபட்ட ஓர் ஆளினால் முகாமை செய்யப்பட்டால், பூர்வாங்கக் கட்டணத்தில், முகாமைக் கம்பனியின் வருடாந்தக் கட்டணத்தில் அல்லது கூறு வைத்திருப்போரால் அல்லது வைப்பிலிடப்பட்ட ஆதனத்தினால் ஏற்கப்படும் வேறு எவையேனும் செலவுதொகைகளில் அல்லது விதிப்பனவுகளில் அதிகரிப்பு எதுவும் ஏற்படலாகாது.

14. (1) முகாமைக் கம்பனி, நம்பிக்கைப்பொறுப்பாளரினதும் ஆணைக்குழுவினதும் எழுத்திலான முற்சம்மதமின்றி கூறு நம்பிக்கைப்பொறுப்பின் சார்பில் ஓர் ஒப்புறுதியீட்டு ஒப்பந்தத்தை அல்லது துணை ஒப்புறுதியீட்டு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளலாகாது.

(2) இந்த விதியின் (1) ஆம் பந்திக்கிணங்கச் செய்து கொள்ளப்பட்ட ஒப்புறுதியீட்டு ஒப்பந்தம் அல்லது துணை ஒப்புறுதியீட்டு ஒப்பந்தம் ஒன்றானது, எல்லா விடயங்களிலும் அத்தகைய உடன்படிக்கையின் கீழ் முகாமைக் கம்பனிக்குச் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்களும் அத்தகைய உடன்படிக்கையைப் பின்பற்றிச் சென்றடைகின்ற எல்லா முதலீடுகளும் கூறு நம்பிக்கைப்பொறுப்பின் வைப்பிலிடப்பட்ட ஆதனத்தின் பாகமாக அமைதல் வேண்டுமென ஏற்பாடு செய்தல் வேண்டும்.

15. (1) கூறு நம்பிக்கைப்பொறுப்புக்கும் முகாமைக் கம்பனிக்கும், அல்லது முதல்வர் என்ற முறையில் எவரேனும் தொடர்புபட்ட ஆளுக்கும் இடையேயான ஏதேனும் கொடுக்கல்வாங்கல், நம்பிக்கைப்பொறுப்பாளரின் எழுத்திலான முற்சம்மதத்துடன் மாத்திரமே செய்யப்படலாம் அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் யாவும் 27 ஆம் விதியின் கீழ் கூறு நம்பிக்கைப்பொறுப்பின் வருடாந்த அறிக்கையில் வெளிக்காட்டப்படல் வேண்டும்.

(2) கூறு நம்பிக்கைப்பொறுப்புக்கும் முகாமைக் கம்பனியின் இணைக் கம்பனிக்கும், கூட்டு முயற்சிக் கம்பனிக்கும். துணைநிலைக் கம்பனிக்கும் அல்லது பங்கு வைத்திருக்கைக்கு கம்பனிக்கும் இடையேயான எல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் நம்பிக்கைப்பொறுப்பாளரின் எழுத்திலான முற்சம்மதத்துடனேயே இடம்பெறல் வேண்டும். அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் யாவும் 27 ஆம் விதியின கீழ் கூறு நம்பிக்கைப்பொறுப்பின் வருடாந்த அறிக்கையில் வெளிக்காட்டப்படல் வேண்டும்.

(3) இந்த விதியின் நோக்கங்களுக்காக இணைக் கம்பனி என்பது, முகாமைக் கம்பனி குறிப்பிடத்தக்க செல்வாக்கை அதில் வைத்திருக்கின்றதும், முகாமைக் கம்பனியின் துணைநிலைக் கம்பனியாகவோ அல்லது கூட்டுமுயற்சிக் கம்பனியாகவோ இல்லாததுமான ஒரு தொழில்முயற்சி எனப் பொருள்படும். குறிப்பிடத்தக்க செல்வாக்கு' என்பது, காலத்துக்குக்காலம் இலங்கைப் பட்டயம்பெற்ற கணக்காளர்கள் நிறுவனகத்தினால் வழங்கப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்களில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

16. (1) ஒரு முகாமைக் கம்பனி, நேரடியாகவோ மறைமுகமாகவோ, உத்தேச முதலீட்டாளர்களுக்கு ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதான மிகவும் பிந்திய விளக்க விவரக்குறிப்பின் பிரதி ஒன்றைக் கிடைக்கக்கூடியதாக்கியிருந்தாலன்றி, பொது மக்களுக்குக் கூறு நம்பிக்கைப்பொறுப்பிலுள்ள கூறுகளை விற்க முனைதலோ அல்லது விற்றலோ ஆகாது. அல்லது எவரேனும் ஆளுக்கு அத்தகைய கூறுகளைக் கொள்வனவு செய்வதற்காக விண்ணப்பப்படிவமொன்றை வழங்குதல் ஆகாது.

(2) விளக்க விவரக்குறிப்பு, அறிந்துகொள்ளப்பட்ட முதலீட்டு முடிபுகளைச் செய்வதற்கு முதலீட்டாளர்களை இயலச்செய்வதற்குப் போதியனவாகவுள்ள வெளிக்காட்டுகைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) விளக்க விவரக்குறிப்பை அங்கீகரிப்பதில், ஆணைக்குழு, முதலீட்டாளர்களின் நலன்கருதி, தகுதியானவையென அது கருதுகின்றவாறான அத்தகைய திரிபுபடுத்துதல்களை விளக்க விவரக்குறிப்பில் நிறைவேற்றும்படி முகாமைக் கம்பனியைத் தேவைப்படுத்தலாம்

(4) ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் மீது /பரிவர்த்தனைகளின்மீது கூறுகள் நிரற்படுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்படுகின்ற விடத்து, விளக்க விவரக்குறிப்பு அது பற்றிய வெளிக்காட்டுகையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) பதினெட்டாம் விதியைப் பின்பற்றி வழங்கப்படும் அல்லது வெளியிடப்படும் விளம்பரம் ஒன்று, இவ்விதியின்கீழ் பொதுமக்களுக்குச் செய்யப்படும் நேரடியான அல்லது மறைமுகமான முனைவு ஒன்றாகக் கருதப்படமாட்டாது.

17. (1) ஆணைக்குழுவின் அங்கீகாரத்துக்கமைய, முகாமைக் கம்பனியொன்று அதன் விளக்க விவரக்குறிப்பினை –

(அ) அதனகத்துக் கூறப்பட்ட தகவலில் ஏதேனும் முக்கிய மாற்றம் இடம்பெறுவதன் மேல் ; அல்லது

(ஆ) அதனகத்துக் கூறப்படவேண்டிய ஏதேனும் குறிப்பிடத்தக்க கருமம் எழுவதன் மேல் ஒன்றில் முற்றிலும் புதியதொரு விவரக்குறிப்பினைப் பதிலிடுவதன் மூலம் அல்லது அதனகத்துள்ள ஏதேனும் தகவலைச் சேர்ப்பதன் மூலம் அல்லது நீக்குவதன் மூலம் திருத்துவது அதன் கடமையாதல் வேண்டும்.

(2) ஒரு விளக்க விவரக்குறிப்புக்கான திருத்தம் எதுவும் எந்தக் திகதியன்று செய்யப்பட்டதோ அந்தத் திகதி துலாம்பரமாக வெளிக்காட்டிவைக்கப்படுதல் வேண்டும்.

(3) ஒரு விளக்க விவரக்குறிப்புக்குச் செய்யப்பட்ட திருத்தமொன்று பின்வருவனவற்றுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்:–

(அ) அதகனத்து அடங்கியுள்ள முறையீடுகளை வாசித்து அவற்றோடு உடன்பட்டுக்கொண்டார் என அத்தாட்சிப்படுத்தி நம்பிக்கைப்பொறுப்பாளரினால் செய்யப்படும் ஒரு வெளிப்படுத்துகை ; அத்துடன்

(ஆ) முகாமைக் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் செய்யப்படும் பின்வரும் படிவத்திலான வெளிப்படுத்துகை :–

''இவ்விளக்க விவரக்குறிப்பு முகாமைக் கம்பனியின் பணிப்பாளர்களினால் பார்வையிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள், தரப்பட்டுள்ள தகவலின் செம்மைக்கான முழுப் பொறுப்பையும் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஏற்றுக்கொள்வதுடன், நியாயமான அனைத்து விசாரணைகளையும் செய்த பின்னரும் அவர்களது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையிலும், எந்த வேறு நிகழ்வுகளை விட்டு விடுதலானது இதனகத்துள்ள எந்தக் கூற்றையும் தவறான வழியில் இட்டுச் செல்லக்கூடுமோ அந்த வேறு நிகழ்வுகள் எவையும் இல்லை எனவும் உறுதிப்படுத்துகின்றனர்''.

(4) இந்த விதியின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும் விளக்க விவரக்குறிப்பொன்று ஆகக்குறைந்தது இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவையாவது முகாமைக் கம்பனியினால் பரிசீலனை செய்யப்பட்டு, ஏதேனும் மாற்றத்தை அல்லது புதிய விடயத்தைக் கணக்குக்கெடுப்பதற்கு முக்கியமானவிடத்து, மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

18. (1) நம்பிக்கைப்பொறுப்பாளரின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி, விளம்பரம் எதுவும் கூறு நம்பிக்கைப்பொறுப்பொன்றின் சார்பில் முகாமைக் கம்பனியால் வழங்கப்படுதலோ அல்லது வெளியிடப்படுதலோ ஆகாது. இவ்விதியின் கீழ் வழங்கப்பட்டவோர் அங்கீகாரம், அவ்வாறு செய்வது தகுதியானதும் தகுந்ததுமெனக் கருதப்படுமிடத்து நம்பிக்கைப்பொறுப்பாளரினால் அல்லது ஆணைக்குழுவினால் வேறுபடுத்தப்படலாம் அல்லது இல்லாதாக்கப்படலாம்.

(2) முகாமைக் கம்பனி, அத்தகைய விளம்பரத்தின் பிரதியொன்றை, அவ்விளம்பரம் பொதுமக்களுக்குக் கிடைக்கக்கூடியதாக்கப்படுவதற்கு ஐந்து சந்தை நாட்களுக்கு முன்னர் ஆணைக்குழுவிடம் கோப்பிடுதல் வேண்டும்.

ஆணைக்குழுவானது அவ்வாறு கோப்பிடப்பட்ட ஏதேனும் விளம்பரம் பற்றிக் கருத்துரை தெரிவிப்பதற்கும் அல்லது அது வெளியிடப்படுவதனை நிறுத்துவதற்குமான உரிமையைத் தனக்கென்று ஒதுக்கிவைக்கின்றது.

(3) கூறு நம்பிக்கைப்பொறுப்பின் செயல்நிறைவேற்றுகை பற்றிய முன் மதிப்பீடு எதுவும் பொது மக்களுக்கோ கூறு வைத்திருப்போருக்கோ வெளியிடப்படுதல் ஆகாது. எய்தப்பட்ட பெறுபேறு பற்றிய வெளியீடு, அதன் எதிர்காலச் செயல்நிறைவேற்றுகை பற்றிய முன் மதிப்பீடு ஒன்றாக முன்வைக்கப்படுதல் ஆகாது.

(4) இந்த விதிகளின் நோக்கத்திற்காக, விளக்க விவரக்குறிப்பொன்று ஒரு விளம்பரமாகக் கருதப்படுதலாகாது.

(5) இந்த விதியின் நோக்கத்திற்காக, ஒரு விளம்பரமானது பின்வருவன பற்றிய கூற்றொன்றையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும் :–

(அ) (கூறு நம்பிக்கைப்பொறுப்பு பங்கிலாபமொன்றைச் செலுத்துமிடத்து) கூறுகளின் விலையும் வருமானமும் ஏற்றத்தாழ்வடையலாமென்றும் ;

(ஆ) எய்தப்பட்ட பெறுபேறு அல்லது தற்போதைய பெறுபேறு குறிக்கப்பட்டிருக்குமிடத்து, காண்பிக்கப்பட்டுள்ள எண்கள் எதிர்காலச் செயல்நிறைவேற்றுகையைக் குறித்துக்காட்டுவனவாக விருக்கமாட்டாதென்றும் ; அத்துடன்

(இ) (i) விளக்க விவரக்குறிப்பின் பிரதி ஒன்று; அத்துடன்

(ii) பிரதியொன்றை எவ்வாறு பெறலாம் என்பதற்கான அறிவுறுத்துதல்கள் எவையேனுமிருப்பின், அவையும், எழுத்திலான வேண்டுகோள் ஒன்றின்மீது பெற்றுக்கொள்ளப்படலாமென்றும் ;

(6) நம்பிக்கைப்பொறுப்பாளர், விளம்பரமொன்று ஆணைக்குழுவின் விளம்பர வழிகாட்டு நெறிகள் மற்றும் ஆணைக்குழுவினால் காலத்துக்குக்காலம் வெளியிடப்படும் பணிப்புரைகளுக்கு இசைய இருக்குமாயின் அதனை அங்கீகரித்தல் வேண்டும். நம்பிக்கைப்பொறுப்பாளர், அத்தகைய அங்கீகாரம் வழங்கப்படுகின்றவாறும் வழங்கப்படுகின்றபோதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட விளம்பரம் பற்றிய அறிக்கையொன்றை ஆணைக்குழுவுடன் கோப்பிடுதல் வேண்டும்.

19. முகாமைக் கம்பனி ஒரு கூறு நம்பிக்கைப்பொறுப்பின் ஏதேனும் கூறை வழங்குவதில் அல்லது விற்பதில்,

(அ) அத்தகைய கூறுகள் ஆணைக்குழுவினால் ஆதரவளிக்கப்பட்டு விதந்துரைக்கப்பட்டு அல்லது அங்கீகரிக்கப்பட்டு இருக்கின்றனவென்றும் ; அல்லது

(ஆ) அத்தகைய முகாமைக் கம்பனியினால் வழங்கப்பட்ட ஏதேனும் விவரக்குறிப்பில் அல்லது விளம்பரங்களில் உள்ள பொருளடக்கங்கள் ஆணைக்குழுவினால் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளனவென்றும் .

நேரடியாகவோ அல்லது மறைமுகமாவோ குறித்தலோ அல்லது ஏதேனும் முறையில் உட்கிடையாகக் கூறுதலோ ஆகாது.

20. (1) கூறு நம்பிக்கைப்பொறுப்பின் தேறிய சொத்துப் பெறுமதியை நிலுவையாகவுள்ள கூறுகளின் எண்ணிக்கையினால் பிரித்து வரும் அடிப்படையில், வழங்கல் மற்றும் மீட்பு விலைகள் நாள்தோறும் கணிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய விலைகள், முகாமைக் கம்பனிக்குச் செலுத்தப்படும் கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகள் மூலம் சீராக்கப்படலாம்.

(2) உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்படாத பிணையங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஆணைக்குழு கூறு நம்பிக்கைப் பொறுப்புக்கு அனுமதியளிக்குமிடத்து, அத்தகைய பிணையங்களின் பெறுமான மதிப்பீடு முகாமைக் கம்பனியினால் கிரமமான அடிப்படையொன்றின் மீது தீர்மானிக்கப்படல் வேண்டும்.

(3) முகாமைக் கம்பனி கோரும் அல்லது வெளியிடும் ஒரு வழங்கல் விலையானது, எவையேனும் பூர்வாங்கக் கட்டணங்களுட்பட கூறுகளைக் கொள்வனவு செய்வதன்மீது செலுத்தப்படற்பாலதான ஆகக்கூடிய விலையாக இருத்தல் வேண்டுமென்பதுடன், மீட்பு விலை, கூறுகளின் மீட்புமீது பெறப்படற்பாலனவான வெளியேறல் கட்டணங்கள் எவையேனுமிருப்பின் அவற்றுக்குப்பின்னரான ஆகக்குறைந்த தேறிய விலையாதலும் வேண்டும். முத்திரைத்தீர்வை அல்லது வேறு வரியைவிட மேலதிக விதிப்பனவுகள் எவையும் செலுத்தப்படவேண்டியனவாதலாகாது.

(4) கூறு நம்பிக்கைப்பொறுப்பொன்றின் மிகவும் பிந்திய கிடைக்கக்கூடியதாகவுள்ள முனைவு மற்றும் மீட்பு விலைகள் ஆகக்குறைந்தது முன்னணியிலுள்ள ஓர் இலங்கைத் தினசரிப் புதினப் பத்திரிகையிலாவது அல்லது முகாமைக் கம்பனியின் இணையத்தளத்தில் வெளியிடப்படல் வேண்டும். கூறு நம்பிக்கைப்பொறுப்பின் தேறிய சொத்துப் பெறுமதி வெளியிடப்பட்டால் இந்த விலையானது பூர்வாங்கக் கட்டணத்தை அல்லது வெளியேறல் கட்டணம் ஏதாவதிருந்தால் அதைத் தவிர்ப்பதாகக் குறிப்பிடலாம்.

21. கூறுகளை மீட்டெடுப்பதற்கான முறையாக ஆவணப்படுத்தப்பட்ட வேண்டுகோள் ஒன்று கிடைக்கப்பெற்றதற்கும் மீட்டெடுத்தல் பணம் கூறு வைத்திருப்பவருக்குச் செலுத்தப்படுவதற்கும் இடையிலான ஆகக்கூடிய கால இடைவெளி, எக்கையாளுகை நாளன்று வேண்டுகோள் பெறப்பட்டதோ அக்கையாளுகை நாளிலிருந்து ஒரு பஞ்சாங்க மாதகாலத்தை விஞ்சுதலாகாது. விதிவிலக்கான ஏதேனும் காரணத்துக்காக ஒரு பஞ்சாங்க மாதகாலத்திற்குள் மீட்டெடுத்தல் பணக் கொடுப்பனவைச் செய்வது சாத்தியமானதல்லாதவிடத்து அல்லது விரும்பத்தக்கதல்லாதவிடத்து, ஒரு பஞ்சாங்க மாத காலத்திற்குள்ளாக அத்தகைய கொடுப்பனவு ஏன் செய்யப்படுதலாகாது. என்பதைத் தீர்மானிப்பதற்கான காரணங்களுடன் உடனடியாக ஆணைக்குழுவிற்கு அதுபற்றி அறிவிக்கப்படுதல் வேண்டும்.

22. (1) கூறு நம்பிக்கைப்பொறுப்பொன்று அறியப்பட்ட ஒரு விலையிலும், கிடைக்கத் தக்கதாகவுள்ள தகவலை அடிப்படையாகக் கொண்டும் கையாளும்போது, விலையானது, அடிப்படைச் சொத்துக்களின் அப்போதைக்கான பெறுமதியை ஐந்து சதவீதத்துக்கு மேற்பட்ட தொகையினால் விஞ்சுமிடத்து அல்லது அத்தொகையினால் குறையுமிடத்து, முகாமைக் கம்பனி, கையாளுகையை ஒத்திவைத்து இயன்றளவு விரைவில் புதிய விலையொன்றைக் கணிப்பிடுதல் வேண்டும்.

(2) கையாளுகை முறையில் செய்யப்படும் மாற்றம் ஒன்று, பின்வரும் சந்தர்ப்பங்களில் மட்டுமே செய்யப்படலாம் :-

(அ) கூறு வைத்திருப்போர்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு, விதிவிலக்கான சூழ்நிலைகளிலும் ; அத்துடன்

(ஆ) மாற்றம் ஒன்றுக்கான வாய்ப்பும் அது செய்யப்பட முடியுமான சூழ்நிலைகளும் பற்றி விளக்க விவரக்குறிப்பில் முழுமையாக வெளிக்காட்டப்பட்டிருப்பினும் ;

(3) இவ்விதியின் (2) ஆம் பந்தியின் நியதிகளின்படி முகாமைக் கம்பனி, கையாளுகை முறையில் மாற்றமொன்றை நிறைவேற்றுவதற்கு நாடுகின்றவிடத்து நம்பிக்கைப்பொறுப்பாளரின் எழுத்திலான அங்கீகாரத்துடனும் கூறு வைத்திருப்போர்களுக்கும் ஆணைக்குழுவுக்கும் ஒரு மாதகால அறிவித்தலைக் கொடுத்த பின்னரும் மாத்திரமே அவ்வாறு செய்ய முடியும்.

(4) மேலே (3) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட கையாளுகை முறையிலான மாற்றம் பற்றித் திருப்தியடையாத கூறு வைத்திருப்பவரொருவர், முகாமைக் கம்பனிக்கு ஏதேனும் வெளியேறல் கட்டணம் செலுத்தப்படாமல் கூறு நம்பிக்கைப்பொறுப்பிலிருந்து வெளியேறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

23. (1) கையாளுகையை இடைநிறுத்தலானது, கூறு வைத்திருப்போர்களின் நலன்களைக் கருத்திற்கொண்டும், ஆணைக்குழுவினதும் நம்பிக்கைப் பொறுப்பாளரினதும் எழுத்திலான சம்மதத்துடனும், விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டுமே செய்யப்படலாம்.

(2) கூறுகளின் மீட்டெடுப்பு இல்லாதொழிக்கப்பட அல்லது இடைநிறுத்தப்பட இருப்பதற்கான பாரிய ஆபத்து உள்ளதென முகாமைக் கம்பனி நம்பினால், அக்கம்பனி அதுபற்றி உடனடியாக ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அதற்கான காரணங்களை வழங்குதலும் வேண்டும். கூறுகளின் மீட்டெடுப்பை இடைநிறுத்துவதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டு ஆணைக்குழுவும் நம்பிக்கைப்பொறுப்பாளரும் அவ்வாறு சம்மதித்துள்ளபோது, கையாளுகை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்னும் நிகழ்வானது, இடைநிறுத்தற் காலப்பகுதியின் போது, கூறு நம்பிக்கைப்பொறுப்பின் விலைகள் வழமையாக வெளியிடப்படும் புதினப் பத்திரிகையில் ஒரு மாதத்தில் ஆகக்குறைந்தது ஒரு முறையேனும் வெளியிடப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் கையாளுகை நாளன்று மீட்டெடுத்தல் வேண்டுகோள்கள் வழங்கலிலுள்ள மொத்த எண்ணிக்கையான கூறுகளின் பத்து சத வீதத்தை விஞ்சுமிடத்து, பத்து சதவீதத்துக்கு விஞ்சுதலான கூறு மீட்டெடுத்தல் வேண்டுகோள்கள் அடுத்த கையாளுகை நாளுக்கு ஒத்தி வைக்கப்படலாம் ; ஆயின், அத்தகைய ஒத்திவைப்புப்பற்றி ஆணைக்குழுவுக்கு எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(4) கூறு நம்பிக்கைப்பொறுப்பின் தேறிய சொத்துப் பெறுமதியின் மூன்று சதவீதத்தொகையிலான அல்லது அதற்கு மேற்பட்ட தொகையிலான கூறுகளை மீட்டெடுக்க, கூறு வைத்திருப்பவர் விரும்புகின்றவிடத்து, கூறு வைத்திருப்பவர் ஆகக்குறைந்தது பதினான்கு நாட்கால எழுத்திலான அறிவித்தலை முகாமைக் கம்பனிக்குக் கொடுத்தல் வேண்டுமென்பதுடன், அம்முகாமைக் கம்பனி அத்தகைய நிகழ்வை நம்பிக்கைப்பொறுப்பாளருக்கு உடனடியாக அறிவித்தலும் வேண்டும்.

24. (1) இவ்விதியின் (3) ஆம் பந்திக்கு அமைய, முகாமைக் கம்பனியொன்று, நம்பிக்கைப்பொறுப்பாளருக்கு எழுத்திலான அறிவித்தல் கொடுப்பதன் மூலம் கூறுகளை இல்லாதாக்கலாம்.

(2) இவ்விதியின் கீழ் நம்பிக்கைப்பொறுப்பாளருக்கு வழங்கப்பட்ட அறிவித்தல் எதுவும், இல்லாதாக்கப்படவுள்ள கூறுகளின் எண்ணிக்கையையும், அது தொடர்பில் முகாமைக் கம்பனிக்குச் செலுத்தப்படற்பாலதான தொகையையும் கூறுதல் வேண்டும்.

(3) இவ்விதியின் (1) ஆம் பந்தியின் கீழ் இல்லாதாக்கும் அறிவித்தலைக் கொடுக்கு முன்னர், முகாமைக் கம்பனி, அவ்வாறு இல்லாதாக்கப்படுவதன் மீது முகாமைக் கம்பனிக்குச் செலுத்தப்படற்பாலதான தொகையைச் செலுத்துவதற்குப் போதிய காசை வைப்பிலிடப்பட்ட ஆதனம் உள்ளடக்குகின்றது அல்லது உள்ளடக்கும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(4) கூறுகள் இல்லாதாக்கப்படுவதன்மீது, முகாமைக் கம்பனி, வைப்பிலிடப்பட்ட ஆனத்திலிருந்து, வைப்பிலிடப்பட்ட ஆனத்தைத் தேறிப் பெறுவது தொடர்பாகத் தீர்வைகளுக்கும் விதிப்பனவுகளுக்குமான தோதான விடுதொகையைக் குறிப்பிடுவதாக முகாமைக் கம்பனி கருதுகின்ற அத்தகைய பணத்தொகையைக் கழித்தபின்னர், அப்போது வழங்கலிலுள்ளனவும் வழங்கலிலுள்ளனவாகக் கருதப்படுகின்றனவுமான கூறுகளின் எண்ணிக்கையினால் பிரிக்கப்பட்டதாக, அத்தகைய அறிவித்தல் வழங்கப்பட்ட திகதியன்று தொழில் முடிவடையும்போது வைப்பிலிடப்பட்ட ஆதனத்தின் பெறுமதிக்குச் சமமான கூறொன்றுக்கான தொகையைப் பெறுவதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

(5) கூறுகளை மீட்டெடுப்பதற்காக, கூறுகள் வைத்திருப்போர்களின் உரிமைகள் 23 ஆம் விதியின் கீழ் இடைநிறுத்தப்படும் ஏதேனும் காலப்பகுதியின் போது, ஏதேனும் கூறினை இல்லாதாக்குமாறு தேவைப்படுத்த முகாமைக் கம்பனிக்குள்ள உரித்துடைமை இடைநிறுத்தப்படுதல் வேண்டும்.

25. (1) முகாமைக் கம்பனி, அதன் கூறு வைத்திருப்போர்கள் பற்றிய நாளது வரையாக்கப்பட்ட இடாப்பொன்றைப் பேணிவருதல் அல்லது பேணிவரச் செய்வித்தல் வேண்டும்.

(2) இடாப்பானது வாசிக்கக்கூடிய ஒரு படிவத்தில் அல்லது வாசிக்கக்கூடிய ஒரு படிவத்தில் காண்பிக்க இயலுமான ஒரு முறையில் பேணப்படுதல் வேண்டும்.

(3) பின்வருவன இடாப்பில் பதியப்படல் வேண்டும்:-

(அ) அதன் கூறு வைத்திருப்போர்களின் பெயரும் முகவரியும் ;

(ஆ) ஒவ்வொரு கூறு வைத்திருப்பவரினாலும் வைத்திருக்கப்படும் (ஒரு கூறின் பின்னங்கள் உள்ளிட்ட) கூறுகளின் எண்ணிக்கை ;

(இ) கூறு வைத்திருப்பவரின் பெயரில் வைத்திருக்கப்படுகின்ற கூறுகள் தொடர்பில் இடாப்பில் கூறுவைத்திருப்பவர் பதிவு செய்யப்பட்ட திகதி ; அத்துடன்

(ஈ) அப்போதைக்கு வழங்கலிலுள்ள (ஒரு கூறின் பின்னங்கள் உட்பட) கூறுகளின் எண்ணிக்கை.

(4) இடாப்பில் அடங்கியுள்ள தகவல் எல்லா நேரங்களிலும் பூரணமானதும் நாளதுவரையாக்கப்பட்டதும் என உறுதிப்படுத்துவற்கு முகாமைக் கம்பனி நியாயமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தலும் உரிய விழிப்புக் கவனத்தைப் பிரயோகித்தலும் வேண்டும்.

(5) இடாப்பானது அதனகத்துப் பதியப்பட்டுள்ள கூறுகளுக்கு உரித்துடையவரான அந்தந்த ஆட்கள் பற்றிய முடிவான சான்றாதல் வேண்டும். வழங்கலிலுள்ள எல்லாக் கூறுகளையும் வைத்திருப்பவராக ஆள் எவரும் இடாப்பில் பதியப்பட்டிராதிருப்பின், முகாமைக் கம்பனியே அந்த ஒவ்வொரு கூறினையும் வைத்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) முகாமைக் கம்பனி, இடாப்பு எந்த முகவரியில் வைத்திருக்கப்படுகின்றதோ அந்த முகவரியை ஆணைக்குழுவிற்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

26. (1) கூறுவைத்திருப்பவர், அத்தகைய கூறுவைத்திருப்பவரால் வைத்திருக்கப்படும் கூறுகளை, சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கைமாற்றல் சாதனமொன்றின் மூலம் கைமாற்ற உரித்துடையவராதல் வேண்டும். இந்த உரித்துடைமை இடாப்பில் பதியப்படல் வேண்டும்.

(2) கூறுகளின் கைமாற்றல் சாதனம் ஒவ்வொன்றும், கூறுகளைக் கைமாற்றும் கூறுவைத்திப்பவரினால் அல்லது அவர் சார்பில் ஒப்பமிடப்படுதல் வேண்டும். (அல்லது ஒரு கம்பனியின் விடயத்தில், கம்பனியின் இலச்சினையிடப்படுதல் அல்லது அதன் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களுள் ஒருவரினால் ஒப்பமிடப்படுதல் வேண்டும்) ; அத்துடன் கைமாற்றம் பெறுபவர் முகாமைக் கம்பனியாக இருந்தாலேயொழிய, கூறுகள் கைமாற்றப்பட்ட கைமாற்றம் பெறுபவரின் பெயர், இடாப்பில் பதியப்படுகின்ற வரையில், கைமாற்றுபவரே வைத்திருப்பவராகத் தொடர்ந்திருக்கின்றாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) மரணமடைந்த கூறுவைத்திருப்பவர் ஒருவரின் நிறைவேற்றுநர் அல்லது நிர்வாகி அல்லது மரபுரிமைச் சான்றிதழை வைத்திருக்கும் ஆள், கூறுவைத்திருப்பவரினால் வேறுவகையில் பெயர் குறித்து நியமிக்கப்பட்டாலொழிய, அத்தகைய மரணமடைந்த கூறு வைத்திருப்பவரால் வைத்திருக்கப்படும் கூறுகளில் ஏதேனும் உரித்தை அல்லது எவையேனும் நலன்களை வைத்திருப்பவராக முகாமைக் கம்பனியினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு ஆளாதல் வேண்டும்.

27. (1) கூறு நம்பிக்கைப்பொறுப்பின் கணக்குகளை வைத்திருப்பதற்கும், கூறு நம்பிக்கைப்பொறுப்பின் அறிக்கைகளைத் தயாரித்து வெளியிடுவதற்கும் முகாமைக் கம்பனியே பொறுப்புடையதாதல் வேண்டும். ஒவ்வொரு நிதியாண்டு தொடர்பிலும் இரண்டு அறிக்கைகளுக்குக் குறையாதவை வெளியிடப்படல் வேண்டும்.

(2) இருபத்தெட்டாம் விதியின் கீழ் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கமைய, கூறு நம்பிக்கைப்பொறுப்பின் நிதியாண்டின் முடிவிலிருந்து மூன்று மாதங்களுக்குள் முகாமைக் கம்பனியினால் வருடாந்த அறிக்கைகளும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுகளும் வெளியிடப்பட்டு, இடாப்பில் பதியப்பட்ட கூறு வைத்திருப்போர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் இடைக்கால அறிக்கைகள், அவை மேவி நிற்கும் காலப்பகுதியிலிருந்து மூன்று மாதங்களினுள் ஆகக்குறைந்தது முன்னணியிலுள்ள ஓர் இலங்கைத் தினசரிப் பத்திரிகையிலாவது வெளியிடப்பட்டு அத்துடன்/அல்லது கூறு வைத்திருப்போர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும். முதல் அரையாண்டுக் கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான இடைக்கால அறிக்கையொன்று, அத்தகைய காலப்பகுதி ஆறு மாதங்களுக்குக் குறைவாகவிருப்பின், அத்தகைய காலப்பகுதி தொடர்பாகத் தயாரிக்கப்படத் தேவையில்லை, அறிக்கைகள் முகாமைக் கம்பனியின் இரு பணிப்பாளர்களினால் ஒப்பமிடப்படுதல் வேண்டும்.

(3) அறிக்கைகள் கூறு நம்பிக்கைப்பொறுப்பின் சொத்துக்களையும், பொறுப்புக்களையும் காட்டும் கூற்றுக்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும் ; மேலும் ஒவ்வொரு சொத்தினதும் பெறுமதியை இலங்கை ரூபாக்களிலும் வைப்பிலிடப்பட்ட ஆனத்தின் சத வீதமாகவும் காட்டுதல் வேண்டும். அனைத்து வகையினவான விலை கூறப்படாத சொத்துக்களும் அவ்வாறு விவரிக்கப்படல் வேண்டும் என்பதுடன், விலை கூறப்பட்ட ஒவ்வொரு சொத்தினதும் பெறுமதியும் பெறுமான மதிப்பீட்டு மூலமும் காட்டப்படுதலும் வேண்டும். ஏதேனும் சொத்தின் இலகுவாகக் கைமாற்றத்தகு நிலை, நிதியச்சட்டமுறையான அல்லது ஒப்பந்தம்சார் தேவைப்பாடுகளினால் மட்டுப்படுத்தப்படுகின்றவிடத்து, இது தெளிவாகக் கூறப்படுதல் வேண்டும் ;கணக்கீட்டுத் திகதியன்று கூறு நம்பிக்கைப்பொறுப்பு எவையேனும் எதிர்பாராத பொறுப்புக்களைக் கொண்டிருக்குமிடத்து, ஒவ்வொரு பிரதான தலைப்பின்கீழும் மொத்த எதிர்பாராப் பொறுப்பும் வெளிக்காட்டப்படுதல் வேண்டும்.

(4) வருடாந்த அறிக்கை பின்வருவனவற்றையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும் :-

(அ) கணக்காய்வாளர்களின் சான்றிதழுடன் கூறு நம்பிக்கைப்பொறுப்பின் கணக்காய்வு செய்யப்பட்ட வருமானக் கணக்குகள் ;

(ஆ) முகாமைக் கம்பனியினால் மீட்டெடுக்கப்பட்டவையும் காசாக்கப்படாதவையுமான கூறு நம்பிக்கைப்பொறுப்பின் கூறுகளின் எண்ணிக்கை பற்றிய குறிப்பீடு ;

(இ) விதி 15 இன் கீழ் வெளியிடப்படத் தேவைப்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய நிரல் ஒன்று ;

(ஈ) ஆணைக்குழு ஒரு வருடாந்த அறிக்கையில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டுமெனக் காலத்திற்குக்காலம் தேவைப்படுத்தக்கூடிய வேறு ஏதேனும் தகவல் ;

(5) முகாமைக் கம்பனி ஆகக்குறைந்தது ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு முறையேனும் , பங்கிலாபங்களை மேலதிகக் கூறுகளாக மீள் முதலீடு செய்யத் தெரிவு செய்துள்ள அதன் கூறு வைத்திருப்போர்களுக்கு அவர்களது சார்பில் மீள் முதலீடு செய்யப்பட்ட பங்கிலாபங்களின் தொகையை வெளிக்காட்டுகின்ற எழுத்திலான கூற்று ஒன்றை அனுப்பிவைத்தல் வேண்டும் ; அத்துடன் எழுத்திலான வேண்டுகோள் செய்யப்படுவதன்மீது விளக்க விவரக்குறிப்பின் நடைமுறையிலுள்ள பிரதியொன்று அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

28. (1) கூறு நம்பிக்கைப்பொறுப்பினால் அல்லது கூறு நம்பிக்கைப்பொறுப்புக்காகத் தயாரிக்கப்படும் எல்லா அறிக்கைகளும், கூறு வைத்திருப்போர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு முன்னராக ஆணைக்குழுவினாலும் நம்பிக்கைப்பொறுப்பாளரினாலும் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். முகாமைக் கம்பனி அத்தகைய அறிக்கைகளை, பகிர்ந்தளிக்கப்படுவதற்கு முன்னர் இரண்டு வாரங்களுக்குக் குறையாமல் பரிசீலனை செய்து கருத்துரை வழங்குவதற்காக ஆணைக்குழுவிடமும் நம்பிக்கைப்பொறுப்பாளரிடமும் கோப்பிலிடுதல் வேண்டும்.

(2) கூறு நம்பிக்கைப்பொறுப்பின் நிதிசார் அறிக்கைகளுக்கும் கணக்குகளுக்கும் இயைபான அனைத்துத் தகவல்களையும் ஆணைக்குழுவானது காலத்துக்குக்காலம் வேண்டுகோள் விடுக்கக்கூடியவாறான அத்தகைய வேறு தகவல்களையும் அறிக்கைகளையும் முகாமைக் கம்பனி ஆணைக்குழுவுக்கு வேண்டுகோள்களின் மீது வழங்குதல் வேண்டும்.

(3) முகாமைக் கம்பனி அதன் வருடாந்த அறிக்கையினதும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகளினதும் பிரதியை அதன் நிதியாண்டின் முடிவிலிருந்து மூன்று மாத காலத்தினுள் ஆணைக்குழுவிடமும் நம்பிக்கைப்பொறுப்பாளரிடமும் கோப்பிடுதல் வேண்டும்.

(4) முகாமைக் கம்பனி, கூறு நம்பிக்கைப்பொறுப்பின் வருடாந்த அறிக்கையினதும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகளினதும் பிரதியொன்றை, கூறு நம்பிக்கைப்பொறுப்பின் நிதியாண்டின் முடிவிலிருந்து மூன்று மாதங்களினுள் ஆணைக்குழுவிடமும் நம்பிக்கைப்பொறுப்பாளரிடமும் கோப்பிடுதல் வேண்டும்.

(5) நம்பிக்கைப்பொறுப்பாளர் அதன் வருடாந்த அறிக்கையினதும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகளினதும் பிரதியொன்றை அதன் நிதியாண்டின் முடிவிலிருந்து நான்கு மாதங்களுக்குள் ஆணைக்குழுவிடம் கோப்பிடுதல் வேண்டும். அத்தகைய அறிக்கை நம்பிக்கைப்பொறுப்பாளரின் பதிவுபெற்ற அலுவலகத்தில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

29. (1) விதி 28 இன் கீழ் ஆணைக்குழுவிடம் கோப்பிடப்படத் தேவைப்படுத்தப்பட்டவையும், வேறுவகையில் அது இக்கோவையுடன் இணங்கியொழுகுவதனை இயலச்செய்வதற்கும் அத்தகைய இணங்கியொழுகுதல் எய்தப்பட்டுள்ளதென்பதை எந்நேரத்திலும் எடுத்துக்காட்டுவதற்கும் அவசியமானவையுமான கணக்குகளையும் புத்தகங்களையும் நிதிக் கூற்றுகளின் அடிப்படையாக அமையும் ஏனைய ஆவணங்களையும் அறிக்கைகளையும் முகாமைக் கம்பனியொன்று ஐந்து ஆண்டுக் காலப்பகுதிக்குப் பேணுதலும் பேணிக்காத்தலும் வேண்டும்.

(2) முகாமைக் கம்பனியொன்று, அதனால் கொள்ளப்பட்டிருக்கின்ற அத்துடன்/அல்லது வைத்திருக்கப்படுகின்ற அல்லது கையுதிர்க்கப்பட்டிருக்கின்ற கூறுகளும் எவையேனும் கொள்ளுதல்களின், வைத்திருக்கைகளின் அத்துடன்/அல்லது கையுதிர்ப்புக்களின் மீதியும் பற்றிய நாளாந்தப் பதிவேடொன்றை வைத்திருத்தல் வேண்டும். முகாமைக் கம்பனியானது சொல்லப்பட்ட நாளாந்தப் பதிவேட்டை வழமையான அலுவலக நேரங்களின் போது எல்லா நேரங்களிலும் நம்பிக்கைப்பொறுப்பாளர் பார்வையிடுவதற்குக் கிடைக்கத்தக்கதாகச் செய்தல் வேண்டும் ; அத்துடன் பதிவேட்டின் பிரதியொன்றை அல்லது அதன் ஏதேனும் பகுதியை நம்பிக்கைப்பொறுப்பாளருக்கு, கோரப்படும்போது கட்டணமின்றி வழங்குதல் வேண்டும்.

*30.* நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவர், கூறு நம்பிக்கைப்பொறுப்பு சார்பில் பின்வரும் கணக்குகளை ஐந்து ஆண்டுகளுக்குப் பேணுதலும் பேணிக்காத்தலும் வேண்டும் :-

(அ) "வருமானக் கணக்கு" - நம்பிக்கைப்பொறுப்பாளரினால் பெறப்பட்ட அனைத்து வருமானக் கணக்கில் கணக்கிடப்படல் வேண்டும் என்பதுடன், மூலதனமாக்கப்படும் வரையில் அல்லது நம்பிக்கைப்பொறுப்பு உறுதிக்கு இணங்கப் பகிர்ந்தளிக்கப்படும் வரையில் அக்கணக்கில் வைத்திருக்கப்படுதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) "பகிர்ந்தளிப்புக் கணக்கு" - நம்பிக்கைப்பொறுப்பு உறுதியைப் பின்பற்றிப் பகிர்ந்தளிப்பு ஒன்று செய்யப்படும் பட்சத்தில், வைப்பிலிடப்பட்ட ஆதனத்திலிருந்து தோதான தொகையொன்று நம்பிக்கைப்பொறுப்பாளரினால் ஒரு பகிர்ந்தளிப்புக் கணக்கிற்குக் கைமாற்றப்படுதல் வேண்டும்.

*31.* இருபத்தொன்பதாம், 30 ஆம் வீதிகளின்கீழ் பேணப்படவும் பேணிக்காக்கப்படவும் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கணக்குகளும் புத்தகங்களும் பதிவேடுகளும் எந்நேரத்திலும் ஆணைக்குழுவினால் பரிசோதனையிடப்படுவதற்கு அமைந்தனவாதல் வேண்டும். அது தொடர்பில், முகாமைக் கம்பனி, பார்வையிடல் நெறியின் போது பணிப்பாளர்களும் அலுவலர்களும் ஏனைய ஊழியர்களும் விசாரணை செய்யப்படுவதனை அனுமதித்தல் வேண்டுமென்பதுடன், இது சார்பில், பூரண ஒத்துழைப்பை வழங்குதலும் வேண்டும். முகாமைக் கம்பனியானது, ஆணைக்குழு தேவைப்படுத்தக்கூடியவாறான பதிவேடுகளின் பிரதிகளை அல்லது பிரித்தெடுக்க பகுதிகளை நியாயயமானவொரு காலப்பகுதிக்குள் ஆணைக்குழுவிற்குக் கொடுத்துவுதல் வேண்டும்.

*32.* (1) நம்பிக்கைப்பொறுப்பாளர் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் கூறு நம்பிக்கைப்பொறுப்புக்கான கணக்காய்வாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும் ; ஆயின், ஆணைக்குழு எந்நேரத்திலும் அதன் அங்கீகாரத்தை மீளப்பெறலாம்.

(2) கூறு நம்பிக்கைப்பொறுப்பின் கணக்காய்வாளர், விடயத்திற்கேற்ப, முகாமைக் கம்பனியின் அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளரின் கணக்காய்வாளராக முற்போந்த இரண்டு ஆண்டுகளின்போது இருந்திருத்தலாகாது.

(3) கணக்காய்வாளரின் கணக்காய்வுக் கட்டணங்கள் நம்பிக்கைப்பொறுப்பாளரின் அங்கீகாரத்துடன் முகாமைக் கம்பனியினால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

(4) நம்பிக்கைப்பொறுப்பாளர், கூறு நம்பிக்கைப்பொறுப்பின் ஆண்டுக் கணக்குகளைக் கணக்காய்வாளரைக் கொண்டு கணக்காய்வு செய்வித்தல் வேண்டும். அக்கணக்குகள் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வு நியமங்களுக்கு இணங்கக் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கின்றன என எடுத்துக்கூறுவதும், கணக்காய்வாளரின் அபிப்பிராயப்படி அக்கணக்குகள் கூறு நம்பிக்கைப்பொறுப்பின் நிதிசார் நிலைமை பற்றி உண்மையானதும் நியாயமானதுமான நோக்கீடு ஒன்றைத் தருகின்றனவா அல்லவா என வெளிக்காட்டுவதுமான அறிக்கையொன்றைக் கூறு வைத்திருப்பவர்களிடையே பகிர்ந்தளிப்பதற்குக் கணக்காய்வாளர் தயாரித்தல் வேண்டும்.

*33.* நம்பிக்கைப்பொறுப்பு உறுதியென்றுக்கு ஏதேனும் திருத்தம் செய்யப்படுதற்கான ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கான நம்பிக்கைப்பொறுப்பாளரின் எழுத்திலான வேண்டுகோள் பின்வரும் தகவலை உள்ளடக்கியிருத்தல்வேண்டும்.

(அ) மாற்றத்தின் தன்மை ;

(ஆ) நம்பிக்கைப்பொறுப்பாளரின் அபிப்பிராயப்படி அத்தகைய மாற்றமானது -

(i) நிதிசார்ந்த அல்லது ஏனைய நியதிச்சட்டமுறையான அல்லது அலுவலகமுறையான தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகச் செயலாற்றுவதற்கு நம்பிக்கைப் பொறுப்பாளரை இயலச் செய்வதற்கு அவசியமானதா ;

(ii) கூறு வைத்திருப்பவர்களின் நலன்களை முக்கியமாக பங்கப்படுத்துகின்றதா ;

(iii) நம்பிக்கைப்பொறுப்பாளரை, முகாமைக் கம்பனியை அல்லது கூறு நம்பிக்கைப்பொறுப்புடன் இணைந்துள்ள வேறு எவரேனும் ஆளை, கூறு வைத்திருப்போர்களுக்கான ஏதேனும் பொறுப்பிலிருந்து விடுவிக்கின்றதா ;

(iv) வைப்பிலிடப்பட்ட ஆதனத்திலிருந்து செலுத்தப்படற்பாலனவான செலவுகளையும் விதிப்பனவுகளையும் அதிகரிக்கின்றதா ; அல்லது

(v) வெளிப்படையான பிழையொன்றைத் திருத்துவதற்கு அவசியமானதா.

*34.* முகாமைக் கம்பனியானது, கூறு நம்பிக்கைப்பொறுப்பு உறுதியின், அத்துடன் ஏதேனும் குறைநிரப்பும் உறுதியின் பிரதியொன்றை, அதன் தொழில் இடத்தில் வழமையான அலுவலக நேரங்களின்போது எல்லா நேரங்களிலும் பொதுமக்கள் எவரும் கட்டணமின்றிப் பார்வையிடக் கிடைக்கத்தக்கதாகச் செய்தல் வேண்டும் ; அத்துடன் நியாயமான கட்டணம் செலுத்தப்படுவதன்மீது அத்தகைய ஆவணங்களின் பிரதிகளைக் கிடைக்கத்தக்கதாகச் செய்தல் வேண்டும்.

*35.(1) கூறு நம்பிக்கைப்பொறுப்பானது, நம்பிக்கைப்பொறுப்பு உறுதியைப் பின்பற்றிக் கலைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், நம்பிக்கைப்பொறுப்பாளர் இவ்விதிக்கு இணங்க நம்பிக்கைப்பொறுப்பை ஒடுக்க முற்படுதலும் வேண்டும்.*

*(2) நம்பிக்கைப்பொறுப்பாளர், கூறு நம்பிக்கைப்பொறுப்பு கலைக்கப்பட்ட பின்னர் செயல்முறைக்கு உகந்த அளவு விரைவில் கூறு நம்பிக்கைப்பொறுப்பின் வைப்பிலிடப்பட்ட ஆதனத்தைத் தேறிப்பெறுதல் வேண்டும் ; அத்துடன் முறையாகச் செலுத்தப்படற்பாலனவான அனைத்துப் பொறுப்புகளையும் அதிலிருந்து செலுத்திய பின்னரும், அத்தகைய கலைப்புக்கான செலவுக்கு ஏற்பாடு செய்துவைத்த பின்னரும், அத்தேறிப்பெறல் வரும்படிகளைக் கூறு வைத்திருப்போர்களுக்கும் முகாமைக் கம்பனிக்கும் (அதற்குரிய அவரின் அல்லது அதன் உரித்துடைமை பற்றிய சான்றினைக் கூறு வைத்திருப்பவர் அல்லது முகாமைக் கம்பனி காண்பித்த பின்னர்) கூறு நம்பிக்கைப்பொறுப்பில் அவ்வவற்றிற்குரிய அந்தந்த நலன்களின் விகிதாசாரப்படி பகிர்ந்தளித்தல் வேண்டும்.*

*(3) நம்பிக்கைப்பொறுப்பாளரினால் வைத்திருக்கப்படும் உரிமை கோரப்படாத எவையேனும் தேறிய வரும்படிகள் அல்லது ஏனைய காசு செலுத்தப்படற்பாலதாக வந்த திகதியிலிருந்து பன்னிரண்டு மாதங்கள் முடிவடைந்த பின்னர், அத்தகைய கொடுப்பனவைச் செய்வதில் நம்பிக்கைப்பொறுப்பாளரினால் உறப்படும் எவையேனும் செலவுகளை அதில் பிடித்து வைப்பதற்கு நம்பிக்கைப்பொறுப்பாளருக்குள்ள உரிமைக்கு அமைய நம்பிக்கைப்பொறுப்பாளரினால் பகிரங்க நம்பிக்கைப்பொறுப்பாளருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.*

*(4) ஆணைக்குழுவானது நம்பிக்கைப்பொறுப்பாளருடனும் முகாமைக் கம்பனியுடனும் கலந்தாலோசித்து, வைப்பிலிடப்பட்ட ஆனத்தின் பெறுமதி தொழிற்பாட்டு ரீதியாக ஒப்பேறு வளவாய்ப்புள்ள மட்டத்திற்குக் கீழே வீழ்ச்சியடைந்தால், இவ்விதிக்கு இணங்க இறுதியாக வெளியிடப்பட்ட விளக்க விவரக்குறிப்பிலுள்ள எற்பாடுகளுக்கு அமைய நம்பிக்கைப்பொறுப்பை ஒடுக்குமாறு நம்பிக்கைப் பொறுப்பாளரைப் பணிக்கலாமென்பதுடன், கூறு முனைவுக் காலப்பகுதியின் போது சேகரிக்கப்பட்ட நிதிகளையும் மீளளிக்கலாம்.*

*36.(1) முகாமைக் கம்பனியொன்று, ஒரு கூறு நம்பிக்கைப்பொறுப்புத் தவிர்ந்த ஆட்களின் பிணையங்கள் பற்றிய முதலீட்டுத் தேக்கங்களை (மூன்றாம் தரப்பு முதலீட்டுத் தேக்கங்கள்) முகாமை செய்யலாம் ; ஆயின், முகாமைக் கம்பனியானது, சட்டத்தின் 19அ என்னும் பிரிவின் கீழ் "முதலீட்டு முகாமையாளர்" என்ற வகுதியின் கீழ் ஒரு சந்தை இடையீட்டாளராக ஆணைக்குழுவிடமிருந்து பதிவுச் சான்றிதழொன்றைப் பெறுதல் வேண்டும்.*

*(2) முகாமைக் கம்பனி, ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்டவாறு முதலீட்டு முகாமையாளர்களுக்கு ஏற்புடையற்பாலனவான விதிகளுக்கிணங்க அத்தகைய மூன்றாம் தரப்பு முதலீட்டுத் தேக்கங்களை முகாமை செய்தல் வேண்டும்.*

*(3) முகாமைக் கம்பனி, மூன்றாம் தரப்பு முதலீட்டுத் தேக்கங்களை முகாமை செய்தல் அத்தகைய முகாமைக் கம்பனியினால் முகாமை செய்யப்பட்ட கூறு நம்பிக்கைப் பொறுப்புகளுக்கு முரணாகவிராதிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.*

*37. விளக்க விவரக்குறிப்பொன்றில், விளம்பரத்தில், அறிக்கையில் அல்லது கூறு வைத்திருப்போர்களுக்கான, பொதுமக்களுக்கான, பத்திரிகைகளுக்கான அல்லது வேறு தகவல் ஊடகங்களுக்கான அறிவித்தலில் அளிக்கப்படும் கூற்று எதுவும், எவரேனும் ஆளுக்கு, அத்தகைய ஆள் அக்கூற்று தோன்றுகின்ற சந்தர்ப்பத்தில் அத்தகைய கூற்று அத்தகைய ஆளுக்கு ஏற்றிக் கூறப்படுவதற்கு எழுத்திலான சம்மதத்தைக் கொடுத்திருந்தாலன்றி, அத்தகைய ஆளுக்கு ஏற்றிக் கூறப்படுதலாகாது.*

*38. சட்டத்தின் ஏற்பாடுகளினாலும் இக்கோவையின் ஏற்பாடுகளினாலும், ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளினாலும் முகாமைக் கம்பனிகளின் மீதும் நம்பிக்கைப்பொறுப்பாளர்களின் மீதும் சுமத்தப்பட்ட கடமைகள், வேறேதேனும் சட்டத்தினால் அவர்களின் மீது வேறுவகையில் சுமத்தப்படுகின்ற கடமைகளுக்கு மேலதிகமானவையாகவுள்ளன; அவற்றைக் குறைப்பனவல்ல.*

*39. இக்கோவையின் ஏற்பாடுகளை அல்லது ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புரைகளை மீறுகின்ற எவரேனுமாள், (விதி 1 இன் பந்தி (3) இன் நியதிகளின்படி ஏதேனும் விதியின் ஏற்புடைமையிலிருந்து விலக்களிக்கப்பட்டாலொழிய), சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.*

*40. இக்கோவையில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய -*

*"சட்டம்" என்பது, 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம் எனப் பொருள்படும்.*

*"விளம்பரம்" என்பது, ஒரு கூறு நம்பிக்கைப்பொறுப்பில் கூறுகளுக்கு ஒப்பப்பணம் செலுத்துவதற்கு அல்லது கூறுகளைக் கொள்வனவு செய்வதற்கு ஆட்களை நேரடியாக அல்லது மறைமுகமாக அழைக்கின்றதும் ஏதேனும் ஊடகத்தில் வெளியிடப்படுவதுமான ஓர் அழைப்பு எனப் பொருள்படும் ;*

“ஆணைக்குழு” என்பது, 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு எனப் பொருள்படும் ;

“தொடர்புடைய ஆள்” என்பது, சட்டத்திலுள்ள அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

“கையாளுகை நாள்” என்பது, கூறுகளுக்கான ஒப்பப்பணமும் கூறுகளின் மீட்பும் பயனுறுத்தப்படும் நாள் எனப் பொருள்படும் ;

“வைப்பிலிடப்பட்ட ஆதனம்” என்பது, கூறு நம்பிக்கைப்பொறுப்பின் சார்பில் நம்பிக்கைப்பொறுப்பாளரினால் அப்போதைக்கு வைத்திருக்கப்படுவனவும் அல்லது வைத்திருக்கப்படுவதாகக் கருதப்படுவனவும் கூறு நம்பிக்கைப்பொறுப்பு உறுதியின் ஏற்பாடுகளுக்கு அமைந்தனவுமான எல்லாச் சொத்துக்களும் எனப் பொருள்படும்; ஆனால் பகிர்ந்தளிப்புக் கணக்கின் வரவில் அப்போதைக்கு இருக்கும் ஏதேனும் தொகையை உள்ளடக்கமாட்டாது ;

“பகிர்ந்தளிப்புக் கணக்கு” என்பது, கூறு வைத்திருப்போர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதற்கான வருமானத்தை வைத்திருப்பதற்காக நம்பிக்கைப்பொறுப்பாளரினால் தாபிக்கப்பட்டிருக்கின்றவொரு கணக்கு எனப்பொருள்படும் ;

“வெளியேறல் கட்டணங்கள்” என்பது, கூறு வைத்திருப்பவருக்குச் செலுத்தப்படும். கூறு ஒன்றின் விற்பனையிலிருந்தான வரும்படிகளுக்கும் மீட்பு விலைகளும் இடையிலுள்ள வித்தியாசத்திற்குச் சமமாக முகாமைக் கம்பனியால் பெற்றுக் கொள்ளப்படும் வரும்படிகளின் பாகம் எனப் பொருள்படும் ;

“விளக்க விவரக்குறிப்பு” என்பது, நம்பிக்கைப்பொறுப்புகளில் கூறுகளுக்கு ஒப்பப்பணமளிப்பதற்காக அல்லது கூறுகளைக் கொள்வனவு செய்வதற்காகப் பொதுமக்களை அழைக்கின்றதும், கூறு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றிய தகவலைக் கொண்டுள்ளதுமான ஆவணம் எனப் பொருள்படும் ;

“அதிவிசேட தீர்மானம்” என்பது, உரியமுறையில் கூட்டப்பட்ட கூறு வைத்திருப்போர்களின் கூட்டமொன்றில் (நேரடியாகவோ பதிலிமூலமாகவோ) சமுகமளித்து வாக்களிப்பவர்களின் எழுபத்தைந்து சதவீத வாக்குகளினால் அல்லது அதற்கு மேற்பட்ட வாக்குகளினால் மட்டுமே நிறைவேற்றப்படக்கூடிய ஏதேனும் தீர்மானம் எனப்பொருள்படும் ;

“பரிவர்த்தனை வியாபாரஞ் செய்யப்பட்ட நிதியம்” என்பது, தங்கத்தின் விலையை அல்லது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் பண்டத்தின் விலையை அல்லது சுட்டெண்ணைத் தொடர்ந்தறியும் கூறு நம்பிக்கைப்டிபொறுப்பு எனப் பொருள்படும் ; அதன் கூறுகள் ஒரு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் மீது நிரற்படுத்தப்பட்டு அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பின் தேறிய சொத்துப் பெறுமதியைக் குறிக்கக்கூடிய அல்லது ஏறத்தாழ குறிக்கக்கூடிய விலைகளில் வாங்கப்படமுடியும்/விற்கப்படமுடியும் ;

“பூர்வாங்கக் கட்டணம்” என்பது, வழங்கல் விலைக்கும் முகாமைக் கம்பனியினால் ஒரு கூறின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட வரும்படிகளின் பாகத்துக்கும் இடையிலான வித்தியாசம் எனப் பொருள்படும் ;

“சுட்டெண் நிதியம்” என்பது, ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பிணையங்களின் சுட்டெண்ணைப் போன்ற அதே விகிதாசாரத்தில் பிணையங்களில் முதலீடு செய்கின்ற கூறு நம்பிக்கைப்பொறுப்பு எனப் பொருள்படும் ;

“வழங்கல் விலை” என்பது, ஒரு கூறையோ ஒரு கூறின் பின்னத்தையோ வழங்குவதற்குப் பிரதிபலனாக வைப்பிலிடப்பட்ட ஆதனத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காக அதற்குச் செலுத்தப்பட வேண்டும் என முகாமைக் கம்பனி தேவைப்படுத்தும் பணத்தொகை எனப் பொருள்படும் ;

“முகாமைக் கம்பனி” என்பது, 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒரு கூறு நம்பிக்கைப்பொறுப்பைத் தொழிற்படுத்துவதற்கு உரிமமளிக்கப்பட்ட ஒரு முகாமைக் கம்பனி எனப்பொருள்படும் ;

“கூடியவரை காசை ஒத்தது” என்பது, வங்கி/அழைப்பு வைப்புக்கள், 3 மாதங்களுக்குக் குறைவான முதிர்ச்சிகளுடனான மீள்கொள்வனவு உடன்படிக்கைகள், 3 மாதங்களுக்குக் குறைவான முதிர்ச்சிகளுடன் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்றினால் புறக்குறிப்பிடப்பட்ட அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட வர்த்தகப் பத்திரம் மற்றும் உடனடியாகக் காசாக மாற்ற முடியுமானவையும் ஓராண்டுக்குக் குறைவான முதிர்ச்சிகளுடனானவையுமான அரசாங்க முறிகளுட்பட்ட அரசாங்கப் பிணையங்கள் போன்ற முதலீடுகள் எனப் பொருள்படும் ;

“தேறிய சொத்துப் பெறுமதி” என்பது, விளக்க விவரக்குறிப்பு, நம்பிக்கைப்பொறுப்பு உறுதி மற்றும் ஆணைக்குழுவினால் காலத்துக்குக்காலம் வழங்கப்படும் பணிப்புரைகள் என்பவற்றில் விவரிக்கப்பட்ட முறையில் கணக்கிடப்பட்ட கூறு நம்பிக்கைப்பொறுப்பொன்றின் தேறிய சொத்துப் பெறுமதி எனப் பொருள்படும் ;

“பகிரங்க நம்பிக்கைப்பொறுப்பாளர்” என்பது, (88 ஆம் அத்தியாயமான) பகிரங்க நம்பிக்கைப்பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தின் கீழ் பகிரங்க நம்பிக்கைப்பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட அலுவலர் எனப் பொருள்படும் ;

“மீட்கத்தக்க பிணையம்” என்பது, எப்பிணையத்தின் நியதிகளின்கீழ் அதனைக் கூறு நம்பிக்கைப்பொறுப்புக்கோ அல்லது கூறு நம்பிக்கைப்பொறுப்பினால் பெயர்குறிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கோ முன்வைப்பதன்மேல், அப்பிணையத்தை வைத்திருப்பவர், வைப்பிலிடப்பட்ட ஆனத்தில் விகிதாசாரமான பங்கையோ அதற்குச் சமமான காசையோ அண்ணளவாகப் பெற்றுக்கொள்ள உரித்துடையவராக இருக்கின்றாரோ அந்த ஏதேனும் பிணையம் எனப்பொருள்படும் ;

“மீட்பு” என்பது, முதல்வர் என்றவாறு முகாமைக் கம்பனியினால் கூறு வைத்திருப்பவர் ஒருவரிடமிருந்து கூறுகள் கொள்வனவு செய்யப்படுதல் எனப் பொருள்படுமென்பதுடன், “மீட்டெடுத்தல்” மற்றும் “மீட்பு விலை” ஆகியன அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும் ;

“பங்கு மூலதனம்” என்பது, வாக்களிப்பு உரிமைகளைக் கொண்டனவான சாதாரணப் பங்குகள் ;

“நம்பிக்கைப்பொறுப்பாளர்” என்பது, சட்டத்திலுள்ள அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

“கூறு” என்பது, ஒரு கூறு வைத்திருப்பவரினால் வைத்திருக்கப்பட்ட கூறு நம்பிக்கைப்பொறுப்பின் சொத்துக்களில் பிரிக்கப்படாத பங்கொன்று எனப்பொருள்படும் ;

“கூறு வைத்திருப்பவர்” என்பது, ஒரு கூறு நம்பிக்கைப்பொறுப்பின் கூறொன்றின் அல்லது கூறுகளின் வைத்திருப்பவராக அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பினால் காலத்துக்குக்காலம் பதிவு செய்யப்பட்ட ஆளொருவர் எனப்பொருள்படும்.

*41.* கூறு நம்பிக்கைப்பொறுப்புக் கோவையைக் குறித்துரைக்கின்ற இவ்விதிகள், இவ்விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு வெளிப்படையாக விலக்களிக்கப்பட்டாலொழிய, தோதானவிடத்து, பரிவர்த்தனை வியாபாரஞ் செய்யப்பட்ட நிதியங்களுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*42.* இரண்டாயிரத்து நான்காம் ஆண்டின் கூறு நம்பிக்கைப்பொறுப்புக் கோவை என எடுத்துக்காட்டப்பட்டவையும், 2004, பெப்புருவரி 6 ஆந் திகதிய 1326/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையுமான விதிகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

9- 1212

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.